# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 18 – International Editor : MICHAEL W.SMITH – இதழ் - 18


## இருவேறு உடன்படிக்கைகளின் உருவகம்

(கலா 4 : 21–31 பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது) .
பழைய ஏற்பாட்டின் பரம்பரை தலைவனான ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். மலடியாயிருந்த ஆபிரகாமின் மனைவி சாராளுக்கும், ஆபிரகாமுக்கும் முதிர் வயதிலே ஒரு குமாரனை தந்து அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று வாக்கு பண்ணியிருந்தார். விசுவாசத்தில் தளர்ந்துபோன சாராள், தன் அடிமைப் பெண்ணான ஆகாரை ஆபிரகாமுக்கு கொடுத்ததின் பேரில் பிறந்தவன் தான் இஸ்மவேல். கர்த்தர் வாக்கு பண்ணின படியே சாராளின் 90 வயதில்,ஆபிரகாமுக்கு 100 வயதாகும் போது கர்த்தர் ஒரு குமாரனைக் கொடுத்தார். அடிமைப் பெண்ணிடத்தில் பிறந்தவன் சுதந்தரவாளி அல்ல.

வாக்குத்தத்தத்தின்படி பெறப்பட்ட ஈசாக்கே சுதந்தரவாளி. இதுதான் அந்த அழகான இரண்டு உடன்படிக்கைகளின் உருவகம். இதன் அடிப்படையில்தான் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கான ஈவை பகிர்ந்தளித்து கனம் பண்ணினார்– நியாயப் பிரமாணமும், சுவிசேஷமும்.

ஆகாரும், இஸ்மவேலும் சீனாய் மலையிலே கர்த்தர் மோசேக்கு முதன்முதலாய் கொடுத்த நியாயப்பிரமாண கற்பனைகளுக்கு



ஒப்பானவர்கள்.இஸ்ரவேல் மக்கள் நியாயப்பிரமாண முறைக்கு உட்பட்ட சடங்கு, சம்பிரதாயங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்தனர். முதல் உடன்படிக்கை, நியாயப் பிரமாணத்தின் சட்டம், விருத்த சேதனத்திற்கு பின் வந்த இஸ்மவேலைக் குறித்தது.

ஆகார் அடிமைப்பெண்ணாய் இருந்ததினால் தன் பிள்ளைகளை சுதந்தர வாளியாக்க முடியவில்லை அதேபோலதான் மோசேயின்

நியாயப்பிரமாண சாசனமும், அதன் பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் அடிமைப் பட்டு விட்டது. விசுவாசத்தின் மூலம் பிறந்த ஈசாக்கு, வாக்குத்தத்தத்தின் மகன்.

இவர் வழியாகத்தான் புது உடன்படிக்கையாக, பிதாவாகிய தேவன் இம்மனுக்குலத்தை இரட்சிக்க தம் சொந்த குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு தந்ததை உறுதிப்படுத்துகிறது.

இஸ்மவேலைக் காட்டிலும் ஈசாக்கின் நிலைமை மேலோங்கியிருக்கும்.தன் பிதாவாகிய தகப்பனின் சித்தப்படி அடிக்கப்படும்படியாக பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட ஈசாக்கைப் போன்ற ஒரு கீழ்ப்படிதலின் அத்தியாயம் இயேசுகிறிஸ்துவுக்குச் சான்று. ஆபிரகாமுடனான கர்த்தருடைய உடன்படிக்கை ஈசாக்கின் மூலமாக


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி இரண்டு உடன்படிக்கைகள் | ஒருநோக்கு செய்தி | பழையதும் புதியதும் | உங்களுக்குத் தெரியுமா? ஏற்றசமயத்தில் ஒரு வார்த்தை |
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 - 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்



## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 : 15

இவ்வுலகில் கர்த்தர் தெரிந்தெடுத்த தம் ஜனங்களுக்காய் பரிபூரணமாக நிறைவேறியது. இதேபோலதான் சீனாய்மலை மற்றும் எருசலேம். கர்த்தரை ஆராதித்த தேவாலயமும், ரோமர் ஆட்சியின்கீழ், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் கட்டுப்பட்டு இருந்த எருசலேம் ஒருபுறம். இதுதான் கிறிஸ்தவர்களின் புதுநம்பிக்கையின் இடம். ஆவிக்குரிய எருசலேமானது, சீனாய் போலல்லாது, புது உடன்படிக்கையின் பிரகாரமாக சுதந்தரவாளிகளான எல்லா ஜனங்களுக்குமான பொதுவான ஒரு இடத்தைக் குறிக்கிறது.

மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள் (26). மோசேயின் நியாயப்பிரமாணத்தினின்று விடுவிக்கப்பட்டு, அதன் சடங்கு, சம்பிரதாயங்களை விட்டுவிலகி, புதுஉடன்படிக்கையின் நம்பிக்கையின் சுவிசேஷத்தின்படி வாழ்கிறவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள். அவர்கள் அழிவுக்கும், பாவத்துக்கும் விலக்கிக் காக்கப்படுவார்கள். அவர்கள் அடிமையினிடத்தில் பிறந்தவர்களல்ல, மாறாக சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவர்கள்.

ஆகாரும் அவளுடைய மகனும் புறக்கணிக்கப்பட்டதைப் போன்று, சபையானது பழைய உடன்படிக்கையை நீக்கிப் போடும்படியாக அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுறுத்துகிறார். அடிமையானவளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை (30). ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் மகன். தேவசித்தத்தின்படி யூதஜனங்களுக்கு கர்த்தர் வைத்திருந்த பரிபூரணமான திட்டத்தினால், விசுவாசிகளுக்கு முன்மாதிரியாகவும், அவரே சுதந்தரவாளியாகவும் காணப்பட்டார்.

புதுஉடன்படிக்கைக்கென்று, மோசேயின் பழைய நியாயப்பிரமாணம் நீக்கிப் போடப்பட வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் வாக்குத்தத்திற்கு சுதந்தரவாளிகளாகத்தக்கதாக இயேசுகிறிஸ்துவை பின்பற்றகடவோம்.

இந்த சுவிசேஷ நாட்களில் வாழக்கூடிய ஜனங்களில் சிலரும் கூட, மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, அதன்படி வாழும் மனநிலையை கொண்டுள்ளனர். இது ஒரு அடிமைத்தனமே. பழைய உடன்படிக்கையை புறம்பே தள்ளி, புது உடன்படிக்கைக்கு பாத்திரவான்களாக மாறுவோம். ஏனெனில் நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம் (31).

## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும். அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது. சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும். மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம். உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**ஆசிரியர். டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

இவரோ விசேஷித்த வாக்குத்தத்தின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார் – எபி 8 : 6.

தேவனுடைய சத்தியத்தினாலும், கிருபையினாலும் நாம் வாழ்ந்துகொண்டிருப்பது எவ்வளவு மேன்மையானது.புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்து தாமே இம்மனுக்குலத்தின் புதிய உடன்படிக்கையையும், வாக்குத்தத்தங்களையும் நமக்கு அருளியவர்.பழைய உடன்படிக்கையில் இருந்த வாக்குத்தத்தங்கள் இந்த பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும் தேசத்தின் பாதுகாப்பையும் அளிக்கவல்லது.ஆனால் புதிய உடன்படிக்கையானது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், நித்தியஜீவனையும் தரவல்லது.

மனுக்குலத்திற்காக தேவன் தந்த இந்த இரண்டுவிதமான உடன்படிக்கைகளைக் குறித்துதான் இந்த இதழில் எழுதியுள்ளேன்.இதனை அடிப்படையாகக்கொண்டு எதிர்கால பதிப்புகளில் தசமபாகமும், கொடுத்தலும், பரிசுத்த ஓய்வுநாள் ஆசரிப்பு, மாம்சீக ஆராதனையும், ஆவிக்குரிய ஆராதனையும் ஆகிய தலைப்புகளில் சிந்திக்கலாம்.

புதிய உடன்படிக்கையின் கீழ் வாழும் நமக்கு பழைய ஏற்பாட்டின் காரியங்களில் சம்மந்தம் உள்ளதா என ஆச்சரியப்படும் ஜனங்களுண்டு.ஆமாம் என்பதே சத்தியம்.பழையஏற்பாடு என்பது கர்த்தரைப் பற்றியதும் அவர் மனுக்குலத்தோடு கொண்ட ஐக்கியத்தைக் குறித்ததுமே. பழைய ஏற்பாட்டிலே தேவனுடைய பரிசுத்தத்தையும், பாவ மனிதனையும் குறித்து நாம் காண முடிகிறது.மேலும் ஆவிக்குரிய காரியங்கள், ஊக்கப்படுத்துதல், வரப்போகிற மேசியாவைக்குறித்து தீர்க்கதரிசனங்கள் இவையாவும் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளதோடு மாத்திரமல்ல, அப்போஸ்தலர்களையும், கிறிஸ்துவையும் குறித்தும் சொல்லப்பட்டுள்ளது.

பழைய உடன்படிக்கை நீக்கிப் போடப்பட்டுவிட்டது. நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கு அடிமைப்பட்டவர்களல்ல. அதில் சொல்லப்பட்டிருந்த பல ஒழுக்க நெறிமுறைகளை கர்த்தர் மாற்றாமல், புதிய ஏற்பாட்டிலும் சொல்லியிருக்கிறார்.பழைய ஏற்பாட்டு ஆகமங்கள் நாம் புரிந்துகொள்ளும்விதமாய் இருந்தாலும், இந்த கிருபையின் நாட்களுக்குள் வாழ்கிற நாம் அதை மட்டும் சார்ந்து முடிவெடுக்க முடியாது.

ஜனங்களில் பலர் பழைய ஏற்பாட்டின் சில கொள்கைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு, ஓய்வுநாள் ஆசரிப்பு, இசைக்கருவிகள் உபயோகிப்பது எனவும், பலிசெலுத்துதல், தூபங்காட்டுதல் இவைகளை கடைபிடிப்பதில்லை.பழைய உடன்படிக்கையானது, முற்றிலுமாக புதிய உடன்படிக்கையால் மாற்றியமைக்கப்பட்டு விட்டது என்பதை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பல ஆசாரியர்கள் தைரியம், விசுவாசம், அர்ப்பணிப்புடன் முன்உதாரணமாக வாழ்ந்தார்கள். நியாயப்பிரமாண சட்டதிட்டங்களுக்கு மாத்திரமே செவிசாய்த்து கீழ்ப்படிந்து நடந்த அவர்களைப் போல நாமும் இருதயங்களில் பரிசுத்தஆவியின் கிருபையினால் கீழ்ப்படிந்து வாழ வேண்டும்.ஆகவே அவர்கள் ஆராதனையில் பின்பற்றிய முறைமைகளை இன்று மாதிரியாக எடுத்துக்கொண்டு கர்த்தரை ஆராதிப்பது என்பது சரியான ஒரு முறையல்ல.

வெளிப்புற நீதியால் இருதயம் சுத்தமாகாது. நியாயப்பிரமாணத்தின் சுதந்தரராகத்தக்கதாக நிச்சயிக்கப்பட்டுள்ளோம். சத்தியத்தின்படி அவருடைய கிருபைக்குள்ளாக ஒப்புக்கொடுத்து வாழும்போது தேவனோடு உள்ள உறவில் நிலைத்திருக்கலாம். பரிசுத்தம் என்பது உள்ளான மனுஷனில்தான் ஆரம்பமாகிறது.


ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : இரண்டு உடன்படிக்கைகள்



**வேத வாசிப்பு:** அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது : என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் – எபி 8 : 10

**விளக்கம்:** மோசேயின் மூலமாக தேவன் கொடுத்த பழை நியாயப்பிரமாணமானது ஜனங்களுக்கு நீதியாய் எண்ணப்படவில்லை.இயேசுகிறிஸ்து தம்மை தியாகபலியாக ஒப்புக்கொடுத்ததின் விளைவாக பிறந்த புதிய உடன்படிக்கைக்கு நாம் சுதந்தரவாளிகள்

**I.பழைய உடன்படிக்கை உருவாக்கப்பட்டது**

A.யாத் 34 : 28 அவர் பத்துக்கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினார்.

B.உபா 5 : 1-3 இஸ்ரவேலரோடே பண்ணின உடன்படிக்கை.

C.மல்கியா 4 : 4 மோசேயின் நியாயப்பிரமாணம் = பழைய உடன்படிக்கை

**II.நியாயப்பிரமாணத்தின் நோக்கம்**

A.கலா 3 : 24-25 நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது

B.ரோமர் 7 : 7-8 நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே

C.ரோமர் 3 : 19-20 பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினாலே வருகிறதினால்

**III.இரண்டு உடன்படிக்கைகளின் ஒப்புமை**

கலா4 : 21 -31 ஆகார் & சாராள் ; இஸ்மவேல் & ஈசாக்கு, சீனாய் மலை & எருசலேம் ; கிரியை & விசுவாசம் , அடிமைத்தனம் & சுதந்தரம்

**IV.விசேஷித்த புதிய உடன்படிக்கை ஸ்தாபிக்கப்பட்டது**

A. எரே 31 : 31-33 புதுஉடன்படிக்கை பண்ணுவேன் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது

B. எபி 8 : 6-12 புதுஉடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது

C. யோவான் 1 : 17 இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.

D. எபேசி 2 : 13-16 கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின

E. மத் 26 : 27 – 28 புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது

F. கலா 3 : 13 -14 நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்

G. யோவான் 8 : 31 – 36 சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

**V.இயேசு - ஒரே மத்தியஸ்தர்- ஒரே பலி- ஒரே பிரதான ஆசாரியர்**

A.எபி 9 : 11-16 கிறிஸ்துவானவர் தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு

B. எபி 10 : 11-18 இவரோ, பாவங்களுக்காக ஒரே பலி

C. ரோமர் 6 : 10 பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்

D. எபி 7 : 20-22 என்றென்றும் ஆசாரியராயிருக்கிறீர்

E. 1தீமோ 2 : 5 தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே

**VI.நியாயப்பிரமாணத்தின் பெலவீனம்**

A. எபி 10 :1-4 நியாயப்பிரமாணமானது நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால்

B. ரோம 8 : 3-4 பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் (எபி 8 :7 ; 10 ; 11)

C. எபி 7 : 11-12 லேவிகோத்திர ஆசாரிய முறைமை

D. எபி 7 : 17-19 முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும், பயனற்றதுமாயிருக்கும்.

**VII.நீக்கிப்போடப்பட்ட பழைய உடன்படிக்கை**

A. எபி 10 : 9-10 முதலாவதை நீக்கிப்போடுகிறார்

B. எபி 8 : 13 புதுஉடன்படிக்கை என்று அவர் சொல்லு கிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்.

C. ரோமர் 6 : 14 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப் பட்டிராமல்

D. ரோமர் 7 : 6 அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக் கிறோமே

**VIII.நியாயப்பிரமாணம் நிறைவேறுதல்**

A. மத் 5 : 17 நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்

B. ரோமர் 13 : 8-10 அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது

**IX.புதுஉடன்படிக்கையின் பிரகாரமாக விசேஷித்த வாழ்க்கை**

A. மத் 5 : 31-48 இப்படிச் செய்வதினால்...நான் உங்களுக்கு சொல்லுகிறேன்

**X.விசுவாசத்தினாலாகும் நீதி**

A. கலா 2 : 16 விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும் படிக்கு கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்

B. ரோமர் 9 : 30-32 விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை

C. கலா 5 : 2-4 நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக் கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது

**முடிவு :** நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும்நீதிமானாக்கப்படுவதில்லையே – கலா 2 : 16

# இரண்டு உடன்படிக்கைகள்

**தேவனுடைய தீர்மானம்-திட்டம்**

தேவனாகிய கர்த்தர் பூமியை சிருஷ்டித்த நாள்முதலே, மனுக்குலத்திற்கென்று ஒரு திட்டம் வைத்திருந்தார்.ஏதேன் தோட்டத்திலே ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தபோது பரிபூரண விடுதலைக்காக கர்த்தர் அநுக்கிரகம் செய்ய வேண்டியிருந்தது.அவருடைய நோக்கம் உடனடியாக நிறைவேறவில்லை.ஆனால் பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகுதான், தேவசித்தத்தின்படி இரட்சிப்பின் வல்லமையும், அநுக்கிரகமும் இயேசுகிறிஸ்துவின் வழியாக பூரணமாய் நிறைவேறிற்று.

**கர்த்தருடைய உடன்படிக்கைகள்**

வேதத்திலே ஜனங்களுடைய பிரயாண வழிநடத்துதல்களைக் குறித்தும், தேவனோடு உள்ள ஐக்கியத்தைக் குறித்தும் காணலாம்.

காலங்கள் செல்ல செல்ல, பல்வேறுபட்ட நேரங்களில் பலவேறு சந்ததியினருக்குள் பல மாறுதல்கள் நேரிட்டது.தேவன் மனுக்குலத்தோடு கொண்ட உறவின் வழிமுறைகளையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.ஆகவேதான் அதற்கான அடிப்படை கொள்கை நியமனமாக உடன்படிக்கை எனும் சத்தியத்தின் வழியாக போதிக்கப்பட்டது. தேவனிடத்திலிருந்து வந்த உடன்படிக்கையானது மனிதனுக்கும் கர்த்தருக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமாகவே எண்ணப்பட்டது. இந்த உடன்படிக்கையின் வாயிலாக கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தங்கள் மூலம் மனுஷனுக்கு அவர் ஆசீர்வாதங்களைத் தந்தார்.



**“ காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே”**

**முதல் உடன்படிக்கை**

முதல் உடன்படிக்கையானது சீனாய் மலையிலே தேவனுடைய தாசன் மோசேக்கு கர்த்தர் கொடுத்தது.

இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடன்படிக்கை பண்ணினேன் என்றார்...அவன் பத்து கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான் (யாத் 34 : 27 - 28). கர்த்தர் சொன்ன எல்லா கட்டளைகளையும் நியாயங்களையும் அவை உள்ளடக்கியது (உபா 5 : 1-3) இந்த உடன்படிக்கை தான் மோசேயின் நியாயப்பிரமாணம் (மல் 4 : 4). இந்த நியாயப்பிரமாணமானது யூதருக்கு மாத்திரமே முதலாவது ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் நியாயப் பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள் (ரோம 2 : 14) .மோசேயின் நியாயப்பிரமாணமானது ஜனங்களுடைய கடமை, நல்லொழுக்க நெறிமுறைகள், பண்டிகை ஆசரிப்பு என அனைத்தையுமே உள்ளடக்கியது. யூதர்கள் கர்த்தரை ஆராதிக்கும் முறைமைகளையும், அவர்களுடைய பாவநிவாரண பலிகளைக்குறித்த காரியங்களையும் வலியுறுத்துகிறது.இந்த பழைய உடன்படிக்கையானது, பின்நாட்களில் இரண்டாவதும், கடைசி உடன்படிக்கையுமான இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நிறைவேற்றப் பட்டதுமான புதிய நித்திய உடன்படிக்கைக்கு அடித்தளமாய் இருந்தது. நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது (எபி 10 : 1-4).அல்லாமலும் காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே. பாவ நிவிர்த்திக்கான தற்காலிகமான தீர்வு. மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் (ரோமர் 8 : 3).

நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்த வில்லை (எபி 7 : 19).

**உபாத்தி**

நாம் அக்கிரமக்கார ராயிருந்தபோது, முதல் உடன்படிக்கை மனுக் குலத்திற்கு கொடுக்கப் பட்டது. தேவன் பலியாக இப்பாவ மனுக்குலத்திற்கு தந்த தம் ஒரே பேறான குமாரனாம் இயேசு கிறிஸ்துவே நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதி மான்களாக்கப்படுவதற்கு நியாயப் பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது (கலா 3 :24-25). பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத் தினால் வருகிறது (ரோமர் 3 : 19-20). நியாயப்பிரமாணம் இல்லா விட்டால் பாவம் செத்ததாயிருக்கும் (ரோமர் 7 : 7-8). மோசேயின் நியாயப்பிரமாணமானது மனுக்குலத்தின் பாவத்தை வெளிப்படுத்தும்பொருட்டே கொண்டுவரப்பட்டது. ஆனால் மாம்சீக பெலவீனத்தால் பாவம் மேற்கொள்ளப்படாமல் போய்விட்டது.

**இரண்டாவது உடன்படிக்கை**

இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணும் உடன்படிக்கை யாவது : நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி நான் அவர்கள் தேவனாயிருப்பேன் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்கிறார் (எரேமி 31 : 31-33).கற்பலகைகளில் எழுதப்பட்ட கற்பனைகளை மாத்திரமே சார்ந்திருக்காது இப்புதிய உடன்படிக்கை.

யோவான் 1 : 17 ல் சொல்லப்பட்டுள்ளபடி நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய் கர்த்தரால் கொடுக்கப்பட்டது. கிருபையும், சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.அந்த முதலாம் உடன்படிக்கை பிழை இல்லாதிருந்ததானால் இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே (எபி 8 : 6-12).

**விசேஷித்த புதிய உடன்படிக்கை**

சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து...இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபேசி 2 : 13-16).பழைய பிரமாணங்கள் வலியுறுத்திய மிருகபலி, பண்டிகை ஆசரிப்பு இவைகளையெல்லாம் கிறிஸ்து இயேசு நீக்கிப் போட்டார்.புதிய உடன்படிக்கையானது நமது கிரியைக ளையல்ல. கிறிஸ்து இயேசுவின் மீதான நம்முடைய விசுவாசத்தைக் காண்பிக்கிறது. நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார் (கலா 3 : 12 -14).மரணமும், ஆக்கினைத் தீர்ப்புமான அந்த பழைய உடன்படிக்கையானது நீக்கிப் போடப்பட்டு, மன்னிப்பும், ஜீவனும் அருளப்பட்டிருக்கிறது.




கிறிஸ்து நமக்காக இரத்தஞ்சிந்தி, இது பாவ மன்னிப்பு உண்டாகும் படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார் (மத்தேயு 26 : 27-28).

காளை, வெள்ளாட்டுக்கடா ஆகிய இவைகளின் இரத்தம் ஒரேதரம் தம்மைத்தாமே பலியாகத்தந்த கிறிஸ்துவுக்கு ஒப்பாகாது.கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனசாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம் (எபி 9 : 11-16) .பாவங்களுக்காக ஒரே பலியை செலுத்தி...இவைகள் (பாவங்கள்) மன்னிக்கப்பட்ட துண்டானால், இனி பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவ தில்லையே (எபி 10 : 11-18). இந்த புதியஏற்பாடு அல்லது புதிய உடன்படிக்கையின் வாயிலாக கிறிஸ்துவின் இரத்தம் நம்மை சகல பாவங்களினின்றும் விடுதலையாக்குகிறது. பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவான் 8 : 31-37). நமக்காக பரிதபிக்கக்கூடாத லேவியரான பிரதான ஆசாரியனேயல்லாமல், இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார் (எபி 4 : 14). விசேஷித்த உடன்படிக்கைக்கு பிணையாளியானார் (எபி 7 : 20-23). மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் (எபி 7 : 11-13). மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார் (ரோமர் 8 : 3-4).

**பழைய உடன்படிக்கை நீக்கிப்போடப்பட்டது**

கிருபையின் புதிய உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையை நீக்கிப்போட்டு, அதன் பின்னர் கொடுக்கப்பட்டது. புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார். பழமையானதும், நாள் பட்டதுமாயிருக்கிற உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது (எபி 8 : 13). எபி 10 : 9 ல் இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்.நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது (ரோமர் 6 : 14).

**விசேஷித்த கிருபை**

நியாயப்பிரமாணத்தையாகிலும், தீர்க்கதரிசனங்களை யானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் (மத் 5 : 17).மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் ஜனங்கள் இன்னும் நீடிக்காவிடிலும், அதன் கட்டளைகள் மறுபடியும் புதிய உடன்படிக்கையிலும் சேர்க்கப்பட்டுள்ளது. நியாயப் பிரமாணமானது நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டு, அதன்பிரகாரம் வாழும் வல்லமையை கிருபையாய் கொடுத்திருக்கிறார்.ரோமர் 13 : 8-10 அன்பு நியாயப் பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. பல தேவஜனங்கள் அவருடைய கிருபையினாலே விடுதலையாக்கப்பட்டு கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூறுகிறார்கள். ஆனால் தேவனோடு உள்ள ஐக்கியமும், நீதியும் நம்மால் வெளிப்படுத்தப்பட வேண்டும். மத்தேயு 5 ம் அதிகாரத்தில் நாம் எப்படி பாக்கியவான்களாய் வாழவேண்டும் என்று உபதேசித்து சொல்லியிருக்கிறார்.

**நியாயப்பிரமாணத்தின் கிரியை**

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே (கலா 2 : 16). நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும் ( கலா 5 : 2-4).

யூத ஜனங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பழைய நியாயப்பிரமாணமானது நீக்கிப்போடப்பட்டு, எல்லா ஜனத்துக்குமான புதிய உடன்படிக்கை கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டது.இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதோடு, நீதியுள்ளவர்களாய் வாழும் வல்லமையை தருகிறது. பழைய ஏற்பாடு பிதாவாகிய தேவனைக்குறித்தும், மனுக்குலத்தின் பாவத்தைக் குறித்தும் ஆழமான சத்தியங்களைப் போதிக்கிறது.ஆகவே மிக முக்கியமானது. பழைய உடன்படிக்கை மாத்திரமே இல்லை. கிறிஸ்து இயேசுவின் மூலமாக நாங்கள் அடைந்த மீட்புக்கும், விடுதலைக்கும், கிருபைக்கும் நன்றி செலுத்துகிறோம்.

## பழைய உடன்படிக்கை

1. இஸ்ரவேலர்களுக்காக
2. கற்பலகைகளில் எழுதப்பட்டது
3. எழுத்துக்களினாலான உடன்படிக்கை
4. லேவியர்களின் ஆசாரியமுறைமை
5. பூமிக்குரிய கூடாரம்
6. கிரியையினாலான நியாயப்பிரமாணம்
7. பாவத்தினாலும், மாம்சத்திற்குட்பட்டது
8. அடிமைத்தனத்தையும், மரணத்தையும் பிறப்பிக்கும்
9. பாவத்திற்காக அநேக மிருகங்களின் பலி
10. வருடாந்திர ஆசரிப்புமுறைமை, இரட்சிப்பு இல்லை
11. தசமபாகம்
12. ஓய்வுநாள் பரிசுத்தமாய் ஆசரிக்கவும்
13. மாம்சீகமான ஆராதனை (இசைக்கருவிகள்)
14. நிழல்
15. நீக்கிப்போடப்பட்டது

## புதிய உடன்படிக்கை

1. எல்லா ஜனங்களுக்காக
2. ஜனங்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டது
3. ஆவியினாலுண்டான உடன்படிக்கை
4. ஒரே உத்தம பிரதான ஆசாரியன் இயேசுகிறிஸ்து
5. ஆவிக்குரிய கூடாரம்
6. கிரியையினாலும் விசுவாசத்தினாலும் உண்டான நீதி
7. நீதியினாலும், ஆவியினாலுமாகிய உடன்படிக்கை
8. விடுதலையின் வாழ்வு
9. ஒரேதரம் கிறிஸ்து பலியானார்
10. நித்திய ஜீவன்
11. கொடுத்தல்
12. ஒவ்வொருநாளும் கர்த்தருக்குப் பரிசுத்தம்
13. இதயத்திலிருந்து உண்டாகும் ஆவிக்குரிய ஆராதனை
14. நிஜம்
15. என்றுமே அழியாது நிலைத்திருக்கும்

**அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால்;**

**இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே**


**எபிரெயர் 8 : 7**

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section

TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY



உங்களுக்குத் தெரியுமா?




இஸ்ரவேல் ஜனங்களுக்கும், தேவனுக்கும் உள்ள ஐக்கியத்தை மேன்மைப்படுத்தும் படியாக பத்து கற்பனைகளாகிய கட்டளைகள் கர்த்தரால் கொடுக்கப்பட்டது. இந்த பழைய உடன்படிக்கை நீக்கிப் போடப்பட்டபின்பும், பத்து கற்பனைகளில் ஒன்பது கட்டளைகள் மறுபடியுமாக புதியஏற்பாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நான்காவது கற்பனை ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக (யாத் 20 : 8) .இந்த ஒரு கற்பனை மாத்திரமே திரும்ப சொல்லப்படவில்லை.

இந்த கற்பனையை நிழலாகக் கொண்டு புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு நாளும் தேவனுக்கு பரிசுத்தமாக ஆசரிக்கப்பட வேண்டும்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## சுயாதீனநிலையில் நிலைகொண்டிருங்கள்

ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்ன் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள் – கலா 5 : 1

கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் சுயாதீனமுள்ளவர்களாயும், சுதந்தரராயும் நிலை கொண்டிருக்கும்படியாய் பவுல் வலியுறுத்துகிறார்.நாம் தெளிந்த புத்தியில்லாதவர்களாயும், பரிசுத்தமற்ற ஜீவியத்தில் சிக்கி, நுகத்தடியை சுமந்து அடிமைத்தனத்தை தெரிந்துகொள்ளாதபடிக்கு இயேசுகிறிஸ்து நம்மை எச்சரிக்கிறார்.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய நாம் விசுவாசத்தினாலே அடைந்த கிருபையை எண்ணாமல், நியாயப்பிரமாண ஆவிக்கு ஒப்புக்கொடுத்து அடிமைப்பட்டு வாழும் அநேக கிறிஸ்தவர்கள் இந்நாட்களிலும் இருக்கிறார்கள்.



நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளில் மேலான விசேஷித்த கட்டளையான அன்பையும், விசுவாசத்தையும் புதைத்து விட்டு, செய்ய வேண்டியதை செய்ய தவறுகிறார்கள்.எழுத்து கொல்லுகிறது; ஆவியோ உயிர்ப்பிக்கிறது என அறியாதிருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுக்கு பரிசுத்தஆவியானவர் தந்த உபதேசம் இவையே. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலே, தேவனுடைய ஊழியக்காரர் விடுதலையோடும், எந்தவிதமான பயமுமின்றி போதிக்ககடவோம். இந்த விடுதலையானது, நியாயப்பிரமாணத்திலே காணப்படவில்லை.

பரிசுத்தத்தோடு தேவனை தொழுதுகொள்ளும்போது மாத்திரமே தேவனுடைய இரக்கத்தையும், விடுதலையையும் பெறமுடியும்.

CONTACT :-

The Editor,
Gospel Truth,
Church of God Publication
2 / 227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.
Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.VEDHA, CHURCH OF GOD, 2/227 KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316